**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 135/2019**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.04.2026 | | |
| பெயர்: | கலியமூர்த்தி (DW3– Cross ) | தகப்பனார் பெயர்: | குப்பு |
| கிராமம்: | வில்வராயநத்தம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாய கூலி | வயது : | 75/2026 |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 06.04.2026</u>

**(ஆரம்பித்த நேரம்– 15.59)**

1. நான் தற்போது செம்மங்குடி கிராமத்தில் வில்வராயநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். எனது சின்னம்மாளின் மகளான ராஜலெட்சுமியை வீரமணி என்பவர் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வீரமணி வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். ஏற்கனவே, மயிலாடுதுறையில் பணிபுரிந்தும், சீர்காழியில் பணிபுரிந்தும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றுவிட்டார்.

2. அந்த வீரமணி பிரதிவாதி ராஜாராமனின் தங்கையின் கணவர் என்றால் சரிதான். நெருங்கிய உறவினர் என்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வில்வராயநத்தத்தில் சர்வே எண்.68 என்பது சுமார் 2 ஏக்கர் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி இடம் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அதில் குடியிருந்தவர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.68ல் நடுவில் கிழக்கு–மேற்காக சாலை அமைக்கப்பட்டு, தெற்கேயும்,

வடக்கேயும் மனைப்பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. அதில் மனை எண்.30 எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது மனை சாலையின் கிழக்கு பக்கத்தில் வடக்கு ஜாரியில் உள்ளது என்றால் சரிதான். பாதைக்கு மேற்கில் வடக்கு–தெற்காக மெயின்ரோடு உள்ளது என்றால் சரிதான். மனை எண்.30ல் எனது மகன் புதிதாக RCC கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். நாங்கள் செம்மங்குடிக்கோ அல்லது சீர்காழிக்கோ வர வேண்டும் என்றால் பாதைக்கும் மேற்கு பக்கத்திலுள்ள தெற்கு–வடக்காக உள்ள சாலையில் தான் வர வேண்டும் என்றால் சரிதான்.

4. எனது மனைக்கு வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களை மேற்கு பக்கத்தில் தெற்கு–வடக்கு சாலை வழியாக தான் கொண்டு வரப்பட்டது என்றால் முதலில் குறுகலாக இருந்தது, பிறகு வீடு கட்டும்போது தெருவில் உள்ளவர்கள் அவரவர்கள் வீட்டை சரி செய்ததால் தான் அதன் வழியாக டிராக்டர் மூலமாக கொண்டு செல்லப்பட்டது. நான் தற்போது வைத்திருக்கும் காரை அந்த வழியாக தான் ஓட்டி செல்ல முடியும் என்றால் சரிதான். தற்போது அந்த பாதை வழியாக டிராக்டர், கார் எளிதாக செல்ல முடியும் என்றால் சரிதான்.

5. கிழக்கு–மேற்கு ரோடு என்பது சிமெண்ட் ரோடு. மேற்படி சிமெண்ட் ரோட்டின் அகலம் சுமார் 10 அடி இருக்கும் என்றால் சரிதான். சிமெண்ட் ரோட்டிற்கு இரு பக்கமும் சுமார் 3 அடி அளவில் மண் பாதை உள்ளது என்றால் சரிதான். அதனால் எதிர்த்தார் போல் வாகனங்கள் வந்தால் எளிதாக மாறி கொள்ள முடியும் என்றால் சரியல்ல, நின்று தான் செல்ல முடியும். ஒரு வாகனம் சென்ற பிறகு தான் மறு வாகனம் செல்ல முடியும். எனக்கு வாதியை சுமார் 4 முதல் 5 வருடங்களாக தெரியும்.

6. மனை எண். 34 மற்றும் 35 ஐ வாதி வாங்கிய விபரம் தெரியுமா என்றால் மனை ஏற்கனவே சம்பந்தம் என்பவரிடமிருந்து செல்லம்மாள் (பிரதிவாதியின் தாயார்) வாங்கியிருந்தார்கள். ஆனால், வாதி வாங்கினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பந்தம் செல்லம்மாளுக்கு கிரயம் செய்து கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எந்த ஆவணத்தையும்

பார்க்கவில்லை. சம்பந்தம் செல்லம்மாளிடம் விற்பனை செய்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. சம்பந்தம் என்பவரிடமிருந்து வாதி தான் கிரயம் செய்துள்ளார் என்றும், செல்லம்மாள் கிரயம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மனை எண்.34 மற்றும் 35க்கு தெற்கில் வாதிக்கு சொந்தமான சுமார் 10 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். மனை எண்.34ல் வாதிக்கு சொந்தமான மின் மோட்டார் அறை உள்ளது என்றால் சரிதான்.மேற்படி 34 மற்றும் 35 மனை வழியாக தான் வாதி அவருடைய வயலுக்கு விவசாய பொருட்களை எடுத்து சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. மேற்படி விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், தெரிந்து கொண்டே நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வில்வராயநத்தத்தில் தாவா சொத்து இருக்கும் இடத்தை ஆதிதிராவிடர் தெரு என்று அழைப்பார்கள் என்றால் சரியல்ல. மேற்படி தெரு பெயரான ஆதிதிராவிடர் என்ற பெயரை வள்ளுவர் தெரு என மாற்றினார்கள் என்றால் சரியல்ல. வள்ளுவர் தெரு வில்வராயநத்தத்திலிருந்து மேற்கே 2 கி.மீ–க்கு அப்பால் உள்ளது. தாவா சொத்து தான் வள்ளுவர் தெரு என்று அழைக்கப்படுகிறது என்றால் சரியல்ல.

9. தாவா சொத்து இருக்கும் இடத்தில் பெரும்பாலான மனைகள் நத்தம் நிலவரி திட்டத்தில் தான் கொடுக்கப்பட்டது, ஆதிதிராவிடர் நலத்துறையின் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் டிராக்டர், கார் போன்ற வாகனங்கள் செல்ல முடியாது என்று கூறிவிட்டு எனது காரை அந்த வழியாக தான் ஓட்டி செல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் உறவினர் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 16.29)**